Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.865/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சுப்பிரமணி |
| Father's Name | : | பொம்மா நாயக்கர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 14 14.08.2025.

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**முதல் விசாரணை**

நான் வெங்கடாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தோட்டத்தில் வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பாக நான் எனது வீட்டிற்கு சாப்பாட்டுக்கு சென்றுவிட்டு திரும்ப இரவு 9.00 மணியளவில் நான் குத்தகைக்கு எடுத்துள்ள வெங்கடாபுரத்தில் உள்ள சுப்பிரமணியின் தோட்டத்திற்கு சென்றேன். அங்கு கோழிக்கூண்டிற்குள் இருந்து கோழிகள் கத்தும் சத்தம் கேட்டது. அங்கு தோட்டத்தில் சாரதி என்பவர் என்னுடைய கோழிக்கூண்டிற்குள் இருந்து ஒரு கோழியை எடுத்துச்சென்று வெளியே ஓடினார். நான் சத்தம் போடவே பக்கத்து வீட்டுக்காரரான கருப்பையா வந்தார். நாங்கள் இருவரும் சாரதியை துரத்திக்கொண்டு போனோம் பிடிக்கமுடியவில்லை. மறுநாள், காலையில் 9.00 மணியளவில் வெள்ளியணை காவல்நிலையம் சென்று என்னுடைய தோட்டத்திலிருந்து கோழியை திருடிச்சென்ற சாரதி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் நான் குத்தகைக்கு இருக்கும் தோட்டத்தின் உரிமையாளர் சுப்பிரமணி எழுதிக்கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய தோட்டத்தில் கோழியை திருடிய சாரதியை பார்த்தால் அடையாளம் தெரியும் அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எனக்கு சொந்த ஊர் வெள்ளியணை வெங்கடாபுரம் இல்லை என்றால் சரிதான். நான் குத்தகை எடுத்துள்ள தோட்டத்தின் உரிமையாளர் சுப்பிரமணியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 3 வருடம் தெரியும். நான் 2024 ம் வருடம் முதல் குத்தகைக்கு இருந்து

**ஒம்/−எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

வருகிறேன் என்றால் வருடம் ஞாபகமில்லை 3 வருடங்களாக குத்தகைக்கு போட்டுள்ளேன். எனக்கு வெங்கடாபுரத்திலுள்ள மக்களை நன்றாக தெரியும் என்றால் தெரியும். அந்த ஊரில் உள்ள கோவில் பூசாரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த ஊரில் கோவில் சம்மந்தமாக பிரச்சினை ஏதும் ஏற்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் குத்தகைக்கு எடுத்துள்ள தோட்டத்தின் உரிமையாளரிடம் ஒப்பந்தம் எதுவும் போட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் குத்தகை எடுத்துள்ள தோட்டத்தினை எனக்கு முன்பாக கருப்பையா என்பவர் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரை வெங்கடாபுரத்தை சேர்ந்த சுப்பிரமணியன் என்பவர் எழுதினார். எதிரியின் குடும்பம் தான் வெங்கடாபுரத்திலுள்ள மாரியம்மன் கோவிலுக்கு பரம்பரை பூசாரியாக இருந்துள்ளார் என்றால் சரிதான். வெங்கடாபுரத்தில் உள்ள சூர்யாவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரியின் அம்மாவிற்கும், எதிரியின் பக்கத்து வீட்டு சூர்யாவிற்கும் ஏற்கனவே பிரச்சினை ஏற்பட்டு வெள்ளியணை காவல்நிலையத்தில் கு.எண்.154/2023 பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பிரச்சினை ஏற்படும் போது நான் வெங்கடாபுரத்தில் தான் இருந்தேன். அது சம்மந்தமாக ஊர்மக்கள் காவல்நிலையம் சென்றார்கள். முதல் விசாரணையில் கருப்பையாவும் நானும் எதிரியை தேடிச்சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 2023 க்கு பிறகு எதிரியையும், எதிரியின் குடும்பத்தையும் ஊரைவிட்டு ஒதுக்கிவைத்துவிட்டார்கள் என்றால் சரிதான். 2023 பிறகு 6 மாதத்திற்கு மேல் எதிரி வீட்டில் இல்லை என்றால் சரிதான். எதிரி மற்றும் எதிரியின் குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தது சம்மந்தமாக RTO மற்றும் Collector ரிடம் ஊர்மக்கள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வெங்கடாபுரம் சூர்யாவிடம் கொண்ட முன்விரோதம் காரணமாகத்தான் என் மூலம் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. குத்தகைத்தாரர் சுப்பிரமணி

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

வெங்கடாபுரத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். வெங்கடாபுரம் வெள்ளியணை சேர்ந்த ஊர்மக்களுக்காக எதிராக எதிரி மற்றும் எதிரியின் குடும்பம் மாவட்ட ஆட்சியரிடம் மற்றும் கோட்டாட்சியரிடம் புகார் கொடுத்ததின் விளைவாக என்னை வைத்து இந்த வழக்கு புகாரை பொய்யாக கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் மறுவிசாரணை. இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.865/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | கருப்பையா |
| Father's Name | : | ரெத்தினம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 14 14.08.2025.

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் வெங்கடாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1–ஐ எனக்கு தெரியும். சுமார் 2 வருடத்திற்கு முன்பாக இரவு 12.00 மணியளவில் அ.சா.1 தோட்டத்தின் கேட்டிற்கு அருகிலுள்ள எனது வீட்டிலிருந்தபோது, அ.சா.1ன் தோட்டத்தின் கோழி கத்தும் சத்தம் கேட்டது நானும் அ.சா.1ம் ஓடினோம் கோழியை தூக்கிசென்ற நபரை துரத்தி ஓடினோம் பிடிக்கமுடியவில்லை. மறுநாள் காலை வெள்ளியணை காவல்நிலையம் சென்று அ.சா.1 புகார் கொடுத்தார். கோழியை திருடிய நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>**

நான் தற்சமயம் வெங்கடாபுரத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரியின் குடும்பமும் நானும் வேறு வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரியின் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எத்தனை குடும்பங்கள் உள்ளது என்றால் ஒரே ஒரு வீடு மட்டும் தான் உள்ளது. என் சமுதாயத்தை சேர்ந்த குடும்பங்கள் எத்தனை குடும்பங்கள் உள்ளது என்றால் 65 குடும்பங்கள் உள்ளது. எதிரியின் குடும்பம் தான் வெங்கடாபுரத்திலுள்ள மாரியம்மன் கோவிலில் பரம்பரை பரம்பரையாக பூசாரியாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தற்சமயம் எதிரியின் குடும்பம் பூசாரியாக இல்லை. எதிரியின் குடும்பதை ஊரைவிட்டு ஒதுக்கிவைத்ததன் காரணமாக பூசாரி பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். எதிரிக்கும் வெங்கடாபுரத்தை சேர்ந்த ஊர்பொதுமக்களுக்கும் முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1ம் நானும் இரவு 12.00 மணிக்கு தான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம் என்றால் சரிதான். எதிரியை சுப்பிரமணி

**ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் இல்லை அந்த இடத்தில் நானும் இருந்தேன். நானும் எதிரியும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரியின் அம்மாவிற்கும், பக்கத்து வீட்டுக்காரரான சூர்யாவிற்கும் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரிதான். சூர்யா என்பவர் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர், எதிரி வேறு சமுதாயத்தை சேர்ந்தவராவார். எதிரியையும், எதிரியின் குடும்பத்தை சேர்ந்தவர்களையும் சுமார் 2 வருடங்களாக ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துவிட்டார்கள். எதிரியும், எதிரியின் குடும்பமும் ஊர்மக்களோடு சேர்த்துவைக்கவேண்டி மாவட்ட ஆட்சியர் மற்றும் கோட்டாட்சியரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எதிரிக்கும் எதிரியின் குடும்பத்திற்கும் வெங்கடாபுரத்தை சேர்ந்த ஊர்மக்களுக்கும் பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். நான் தான் வெங்கடாபுரத்தை சேர்ந்த சுப்பிரமணியன் இடத்தை 2024 வருடம் வரை குத்தகைக்கு பார்த்துவந்தேன் என்றால் சரிதான். எனக்குபின்னிட்டு தான் சுப்பிரமணி என்பவர் குத்தகைக்கு பார்த்து வருகிறார். எதிரியின் ஊரை சேர்ந்தவர் என்பதால் எதிரிக்கும் ஊர்மக்களுக்கும் ஏற்கனவே உள்ள முன்விரோதம் காரணமாகவும், வெங்கடாபுரத்தை சேர்ந்த சுப்பிரமணி குத்தகை தோட்டத்தை நடத்தி வந்ததாகவும், அவ்வூர் மக்களுக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரியின் ஊரில் வெங்கடாபுரத்தை சேர்ந்த மக்களுக்கு முடிதிருத்தும் வேலை செய்து வருவதால் ஊர்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் எதிரியை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை. இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**